[30th March 1966

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தாமிரக் கனி திண்டிவனம் பகுதியில் கிடைப்பதாகச் சொல்கிறார்களே ! உண்மையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கள்ளக்குறிச்சியிலே கிடைக்கிறது ; திண்டிவனம் பகுதியில் அல்ல.

Laboratories for science subjects

* 508 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any special laboratories for physics, chemistry and other technological subjects are to be set up in the State ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. வை. சங்கரன் : மற்ற ராஜ்யங்களில் இந்த மாதிரி ஸ்பெஷல் லாபரடாரிஸ் ஏற்படுத்தப்பட்டிருப்பதால் அதிகப் பயன் தருவதாகச் சொல்லப்படுகிறது. அந்த மாதிரி இங்கும் ஏற்படுத்த சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுப்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பிற ராஜ்யங்களில் எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கை பற்றி எங்களிடத்தில் தகவல் இல்லை.

தையல் இயந்திரங்கள் வழங்குதல்

* 509 கேள்வி.—திரு. பி. ஜயராஜ் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில் 1963, 1964, 1964-65 ஆண்டுகளில் அரிசன இலாகாவால் எத்தனை தையல் மிஷின் வழங்கப்பட்டது ?

(இ) அதில் நன்னிலம் தாலுகாவில் கொடுக்கப்பட்டது எத்தனை ?

(உ) அதன் விவரம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் :

	ஆண்டு. (1)	இயந்திரங்களின் எண்ணிக்கை. (2)
(அ)	1962–63	27
	1963–64	27
	1964–65	39
(இ)	1962–63	இல்லை.
	1963–64	3
	1964–65	2

30th March 1966]

வழங்கப்பட்ட இயந்திரங்களின் விலை.

	தஞ்சை மாவட்டத்தில்.	நன்னிலம் தாலுகாவில்.
	ரூ. பை.	ரூ. பை.
(உ) 1962–63	10,426 05	—
1963–64	7,914 33	879 36
1964–65	11,922 69	611 42

திரு. கே. பி. பழனிசாமி : தையல் மெஷின் கொடுப்பதிலே லெதர் தைப்பதற்கும் மெஷின் கொடுத்தார்கள். இப்போது அது கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. ஏன் கொடுக்க வில்லை என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : தோல் தைக்கும் மெஷின்கள் கொடுக்கவும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. இது ஜாஸ்தி விலையாக இருப்பதால் திருப்தி செய்ய முடியாது என்று சொல்லப்பட்டது. ஆயினும் வழக்கம் போல் தோல் தைக்கிற மெஷின் கொடுப்பது நல்லது என்று கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : தையல் மெஷின் தருவது எந்தெந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது? வழங்கப்பட்டதற்குப் பிறகு அதைப் பெற்றவர்கள் அதைச் சரிவர உபயோகிக்கிறார்கள் என்ற தகவலை நமது இலாகா பெற என்ன முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிறது?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தொழிலைப் பயின்றவர்கள் இதற்காக விண்ணப்பிக்கவேண்டும். விண்ணப்பித்தவர்களைக் கூப்பிட்டு பரிட்சை செய்யப்படுகிறது. அதற்குப் பிறகு உண்மையிலேயே தொழிலைப் பயின்றிருக்கிறார்கள் என்றால் இந்த மெஷின்கள் வழங்கப்படுகின்றன. இதைக் கொண்டு பொதுவாக அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஓரிரு இடங்களில் புகார் வந்தால் உடனே விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது

திரு. ஆ. கு. சுப்பையா : தஞ்சை மாவட்டத்தில் பத்தாயிரம் ரூபாய் அளவுக்குத்தான் தையல் மெஷின்கள் வாங்கிக் கொடுக்கப் பட்டதாகச் சொன்னார்கள். எத்தனை மெஷின்கள் வாங்கப் பட்டன? எந்தெந்த தாலுகாவிற்கு எவ்வளவு கொடுக்கப் பட்டது?

கனம் திரு. பூ. கக்கன் : 1962-63-ல் வாங்கிய மொத்த மெஷின் களின் எண்ணிக்கை 27 என்று சொன்னேன். எந்தெந்த தாலுகாவுக்கு எவ்வளவு என்ற தகவல் என்னிடத்தில் இல்லை. நன்னிலம் தாலுகாவைப் பற்றிக் குறிப்பாகக் கேட்டதால் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : இவ்வாறு தையல் மெஷின் கொடுப்பதன் மூலமாக அவர்கள் பிழைக்க வழி இருக்கிறது. அந்த மெஷின்கள் ரிப்பேர் ஆகிவிட்டால் பிளாக் மூலம் ரிப்பேர் செய்து கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

[30th March 1966

கனம் திரு. பூ. கக்கன் : இயந்திரங்களைப் பெற்றுத்தான் எல்லாம் நன்மை அடைய முடியும் என்று சொன்னேன். ஏதாவது கோளாறுகள் ஏற்பட்டால், ஒரு நட்டுப்போனால்கூட அத்தனையும் செய்து கொடுக்கவேண்டுமென்று இல்லாமல் அதையெல்லாம் அவர்களே செய்துகொள்ளவேண்டும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது 1963-64-இல் 27 என்றும் 1964-65-ல் 19 என்றும் சொன்னார்கள் . . . .

கனம் திரு. பூ. கக்கன் : 19 என்று சொல்லவில்லை, 39 என்று சொன்னேன்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : 19 என்று எனக்குக் கேட்டது, ஆகவே குறைந்ததற்குக் காரணம் என்ன என்று கேட்கலாம் என்று நினைத்தேன்.

Harijan Welfare Elementary School, Kilambil

* 510 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any case of food poisoning was reported, in a Harijan Welfare Elementary School at Kilambil in Lalgudi taluk; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளி கலெக்டர் அனுப்பியுள்ள அறிக்கையின்படி, லால்குடி வட்டம் கீழ் அன்பில் ஹரிஜன நல உயர் தொடக்கப் பள்ளியில் 9-12-1965 அன்று 211 சிறுவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கப்பட்டது. உணவு உண்ட சுமார் அரை மணி நேரத்துக்குப் பிறகு 15 சிறுவர்கள் இரண்டொரு முறை வாந்தியெடுத்தனர். அவர்களில் சிலரிடம் இலேசான மயக்க அறிகுறிகள் தென்பட்டன. அவர்களுக்கு உடனடியாக அன்பில் கிராம மருந்தகத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டது. லால்குடி அரசாங்க மருத்துவ மனையின் மருத்துவ அதிகாரியும் அச்சிறுவர்களுக்கு புறநோயாளிகளுக்குரிய சிகிச்சை அளித்தார். மாவட்ட நல அதிகாரி 10-12-1965-ல் அப்பள்ளியைப் பார்வையிட்டு, எல்லாச் சிறுவர்களும் உடல் நலத்துடன் இருப்பதைக் கண்டார்.

திரு. வை. சங்கரன் : என்ன காரணத்தினாலே இது போன்ற சம்பவங்கள் ஏற்படுகின்றன, இதற்கு யார் பொறுப்பு என்று கண்டுபிடிக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அது விசாரணை செய்யப்பட்டு கிண்டிக்கு அனுப்பி அதைப் பார்த்திருக்கிறார்கள். அதில் விஷம் இல்லை என்று கலெக்டருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த பதில் இங்கு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேறு எந்தக் காரணமும் இல்லையென்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.